# முதல் இடைப் பருவத்தேர்வு - 2022

12 - ஆம் வகுப்பு

## உயிரியல்

காலம் : 1.30 மணி

மதிப்பெண்கள் : 35

### உயிரி - தாவரவியல்

**பகுதி - அ**

**I சரியான விடையைத் தேர்வு செய்க.** 3 X 1 = 3

1. பிளவுப் பல்கருநிலை காணப்படும் தாவரங்கள்
அ) பிரையோஃபைட்டுகள் ஆ) ஆர்க்னிடுகள்
இ) டெரிடோஃபைட்டுகள் ஈ) ஆலீகாக்கள்

2. **பொருத்துக.**
1) இலைவளர் மொட்டுகள் - a) ஹைட்ரில்லா
2) ஹூலோபிய கருவூண்திசு - b) வெளவால் வழி மகரந்தச் சேர்க்கை
3) அராப்டீரோஃபில்லி - c) பிரைமுலேசி
4) கிடைமட்டச்சூல் - d) பிரையோஃபில்லம்
அ) 1 - d, 2 - a, 3 - b, 4 - c ஆ) 1 - d, 2 - a, 3 - c, 4 - a
இ) 1 - d, 2 - a, 3 - b, 4 - c ஈ) 1 - d, 2 - a, 3 - c, 4 - b

3. ஒரு தாவரத்தின் சோதனைக் கலப்பு உள்ளடக்கியது
அ) இரு மரபணு வாக்கங்கள் ஒடுங்கிய பண்புடன் கலப்புறுதல்
ஆ) $F_1$ - கலப்பினங்களிடையெ நடைபெறும் கலப்பு
இ) $F_1$ - இலப்புயிரியுடன் இரு ஒடுங்கு மரபணுவகையம் கொண்டவைகளின் கலப்பு
ஈ) இரு மரபணுவாக்க வகையங்களுடன் ஓங்கு பண்பு கலப்பு

**பகுதி - ஆ**

**II ஏதேனும் 2 - மட்டும் விடையளி.** 2 X 2 = 4

4. போலன்கிட் என்றால் என்ன?
5. நுண்வித்துருவாக்கம் என்றால் என்ன?
6. பல்மரபணு பாரம்பரியம் - விளக்குக.
7. உண்மைப் பெருக்கம் என்றால் என்ன?

**பகுதி - இ**

**III ஏதேனும் 2 மட்டும் விடையளி. வினா எண் 9 கட்டாய வினா.** 2 X 3 = 6

8. முதிர்ந்த கருப்பையின் அமைப்பை படம் வரைந்து பாகம் குறி.
9. எண்டோதீரியம் மகரந்தப்பை வெடித்தலுடன் தொடர்புடையது - இக்கூற்றை நியாயப்படுத்துக.
10. பிறகலப்பு குறித்து எழுதுக.

**பகுதி - ஈ**

**IV விரிவான விடையளி.** 1 X 5 = 5

11. சூலின் நீள்வெட்டுத்தோற்றம் படம் வரைந்து விவரி.

**(அல்லது)**

ஓங்கு தன்மை மறைத்தலை விளக்கி வரைக.

12 விலங்கியல் பக்கம் - 1

Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

## உயிரி - விலங்கியல்

### பகுதி - I

**சரியான விடையைத் தேர்வு செய்க.** 2 X 1 = 2

1. எவ்வகை இனப்பெருக்கத்தில் வேறுபாடுகள் தோன்றும்?

அ) பாலிலி இனப்பெருக்கம் ஆ) கன்னி இனப்பெருக்கம்

இ) பாலினப்பெருக்கம் ஈ) அ மற்றும் ஆ

2. இவ்வகை இனப்பெருக்க துணை தொழில்நுட்பத்தின் மூலம் கருவுறுதல் வீதம் 75 முதல் 85% ஆகும்.

அ) உடலுக்கு வெளிய கருவுறுதல்

ஆ) வாடகைத்தாய்

இ) அண்ட சைட்டோபிளாசத்தினுள் விந்து செல்களை செலுத்துதல்

ஈ) கருப்பை உள் இடமாற்றம்

### பகுதி - II

**ஏதேனும் இரண்டு வினாக்களுக்கு விடையளி.** 2 X 2 = 4

3. இழப்பு மீட்டல் என்றால் என்ன? அதன் வகைகள் யாவை?
4. மனித அண்டச்செல் படம் வரைந்து பாகங்களை குறி.
5. இனச்சேர்க்கையுறும் உயிரிகளை எவ்வாறு அவை இனச்சேர்க்கையுறும் காலத்தைக் கொண்டு வகைப்படுத்தலாம்?
6. கோரியான் நுண்நீட்சி மாதிரி ஆய்வு குறிப்பு எழுதுக.

### பகுதி - III

**இரண்டு வினாக்களுக்கு விடையளி. வினா எண் 10-க்கு கட்டாயமாக விடையளி.** 2 X 3 = 6

7. அர்ரீனோடோகியை தெலிடோக்கியிலிருந்து வேறுபடுத்து.
8. சிம்பால் - சிறுகுறிப்பு வரைக.
9. அக்ரோசோம் வினை என்றால் என்ன?
10. பனிக்குடத் துளைப்பு - சிறுகுறிப்பு வரைக.

### பகுதி - IV

**எவையேனும் ஒன்றுக்கு மட்டும் விடையளி.** 1 X 5 = 5

11. கன்னி இனப்பெருக்கம் என்றால் என்ன? அதன் வகைகளை விளக்குக.

**(அல்லது)**

இயற்கை கருத்தடை முறைகள் பற்றி விவரி.



Kindly send me your study materials to our email id - padasalai.net@gmail.com